| | |
|---|---|
| மையம் : ____________________<br><br>மேற்பார்வையாளர்<br>கையொப்பம்: ____________________ | பெயர்: ____________________<br><br>பதிவு எண்: ____________________<br><br>நாள் : ____________________ |

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சான்றிதழ்க் கல்வி**

**BA00 மேல்நிலை**

**எழுத்துத் தேர்வு – மே–ஜூன் 2020**

**நேரம் : 1.30 மணி** **மதிப்பெண் : 50**

**I. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

*Read the following text and answer the questions given below in a single line.* ***(5x1=5)***

தனி ஒருவரால் எழுதி வைக்கப்படாமல் வாய்மொழியாகக் கேட்டுப் பாடப்படுவதால் நாடோடிப் பாடல்களை 'வாய்மொழி இலக்கியம்' என்றும் கூறுகிறார்கள். அண்மைக் காலமாக இவற்றைத் தொகுத்து நூலாக வெளியிட்டும், பாடியும் வருகிறார்கள்.

நாட்டுப்புறப் பாடல்களில் தாலாட்டு, ஒப்பாரி, நாட்டுவளம், வழிபாடு, வீட்டு நிகழ்ச்சிகள், தொழில்கள், தொழிலாளர் நிலைமை, காதல் முதலானவை அமைந்திருக்கின்றன. நாட்டுப்புறப் பாடல்களில் பேச்சு வழக்குச் சொற்கள் மிகுந்து காணப்படும். இவை எளிமையானவை, இனிமையானவை.

**வினாக்கள்:–**

1. நாடோடிப் பாடல்கள் எவ்வாறு அறிந்து கொண்டு பாடப்படுகின்றன?

------------------------------------------------------------

2. நாடோடிப் பாடல்களுக்கு வழங்கப்படும் பெயர் யாது?

------------------------------------------------------------

3. அண்மைக் காலங்களில் எவ்வாறு நாடோடிப் பாடல்கள் அறிந்து கொள்ளப்படுகின்றன?

-------------------------------------------------------

4. நாட்டுப்புறப் பாடல்களில் அமைந்திருக்கும் வகைகளில் எவையேனும் இரண்டைக் குறிப்பிடுக.

-------------------------------------------------------

5. நாட்டுப்புறப் பாடல்களின் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.

-------------------------------------------------------

**II. பின்வரும் பாடல் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

*Read the following poem and answer the question give below in a single line.*

***(5x1=5)***

ஓடும் உதிரத்தில் – வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் – சாதி
தெரிவ துண்டோ அப்பா?
எவர் உடம்பினிலும் – சிவப்பே
இரத்த நிறமப்பா!
எவர் விழி நீர்க்கும் – உலர்ப்பே
இயற்கைக் குணமப்பா!

**வினாக்கள்:–**

1. இப்பாடலின் ஆசிரியர் யார்?

-------------------------------------------------------

2. எவற்றில் தேடினாலும் சாதி தெரிவதில்லை?

-------------------------------------------------------

3. அனைத்து மனிதரின் உடலிலும் ஒரே நிறமாக இருப்பது எது? நிறம் யாது?

-----------------------------------------------------------

4. எல்லோரது விழி நீரிலும் இயற்கை குணமாக அமைந்திருப்பது எது?

-----------------------------------------------------------

5. இத்தகு அருமையான கருத்தை எடுத்து உரைப்பது யார்?

-----------------------------------------------------------

**III. பின்வரும் சொற்களைப் பொருள் தருமாறு சொற்றொடரில் அமைக்க:–.**

*Write meaningful sentences with the following words.* ***(5x2=10)***

1. அடித்தளம்

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

2. உரிமை

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

3. கருமம்

-----------------------------------------------------------

-----------------------------------------------------------

4. பெருமை

-----------------------------------------------------------

---

5. வியூகம்

---

---

**IV. பின்வரும் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு மட்டும் சில வரிகளில் விடை தருக.**

*Answer any Five of the following questions in a few lines. **(5x4=20)***

1. தாயுமானவர் இறைவனிடம் அருள் புரியுமாறு எதற்காக வேண்டுகிறார்?
2. கதிர்வேலுவை வேலைக்கு அனுப்புவதற்கான காரணமாக ஆறுமுகம் கூறியது என்ன?
3. சீனிவாச ராஜுவிற்கு நேரிட்ட இன்னல் என்ன?
4. ஏனாதிநாதர் ஆதிசூரனை ஏன் கொல்லவில்லை?
5. வாழ்வில் மறைந்து போனவையாகப் பாரதிதாசன் கூறுவன யாவை?
6. சித்தார்த்தன் தன் தந்தையிடம் எதற்காக அனுமதி வேண்டினான்?
7. நேர்காணல் என்பது யாது?
8. கருமமே கண்ணாயினாரின் பண்புகள் யாவை?
9. எதை மறக்கக் கூடாது? எதனை அன்றே மறக்க வேண்டும்?
10. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

---

---

---

---

---

---

---

**V. பின்வரும் பொருள்களுள் ஏதேனும் ஒன்று பற்றி கடிதம் எழுதுக.**

*Write a letter on any one of the given subjects.* ***(1x10=10)***

1. கணினியின் பயன்கள்
2. பள்ளியில் அழைத்துச் செல்லும் சுற்றுலாவிற்குப் பணம் கேட்டுத் தந்தைக்குக் கடிதம்.
3. குழந்தைத் தொழில் ஒழிப்பு பற்றி நண்பனுக்குக் கடிதம்.

******